**29.04.2026**

**CC 1/2016**

**PW.1.  Dhayanandhan S/o. Shanmugam**

**எதிரி ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**
**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி :**

1. ஆஜர் எதிரியை எனக்கு எப்படி தெரியும் என்றால், நான் வேலை செய்து வந்த பைனான்ஸ்சில் எதிரி கொடுக்கல் வாங்கல் வைத்திருந்த முறையில் தெரியும். நான் ஸ்ரீ வித்யா லட்சுமி பைனான்ஸ்சில் வேலை செய்தேன்.

2. நான் ஸ்ரீ வித்யா லட்சுமி பைனான்ஸ்சில் MD ஆறுமுகம் என்பவரை எனக்கு தெரியும். நான் எதிரிக்கு பணம் கொடுத்தபோது தனியாகதான் இருந்தேன். என்னுடன் யாரும் இல்லை. எதிரிக்கு பணம் கொடுத்தபோது அவர் எனக்கு எழுதிகொடுத்த கடனுறுதி சீட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

3. எதிரி காசோலை கொடுத் தபோது எதிரி எனக்கு எழுதி கொடுத்த கடனுறுதி சீட்டை எதிரிக்கு திரும்ப கொடுத்தேனா என்றால், இல்லை. எதிரி இரண்டு ஆவணங்களையும் ஒன்றாக திரும்ப பெற்றுகொள்வதாக சொன்னதால் கொடுக்கவில்லை.

4. எதிரி எனக்கு காசோலை கொடுப்பதற்கு முன்பு என்னிடம் வாங்கிய கடனுக்காக வட்டியை கேட்டு எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பவில்லை. எதிரி எனக்கு கொடுத்ததாக சொல்லப்படும் கடனுறுதி சீட்டில் ராமமூர்த்தி என்பவர் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான்.

5. எதிரிக்கு நான் பணம் கொடுத்தபோதே கடனுறுதி சீட்டை எழுதி வாங்கினேன் என்றால் சரிதான். கடனுறுதி சீட்டில் சாட்சி கையொப்பம் போட்டுள்ள இரண்டு நபர்களின் பெயர் தற்போது ஞாபகம் இல்லை. எதிரிக்கு நான் கொடுத்த பணத்திற்கு ஒரு வருடம் கழித்து காசோலை கொடுத்ததால்மேற்படி தொகைக்கு வட்டி தொகை எவ்வளவு ரூபாய் என்றால் 24சதவீதம் வட்டி, ரூபாய் 1 லட்சம் வட்டியுடன் சேர்த்து 5லட்சம் ரூபாயக்கு காசோலை கொடுத்தார்.

6. காசோலையை எதிரிதான் பூர்த்தி செய்து என்னிடம் கொடுத்தார். நான் எதிரிக்கு 05.06.2012 அன்று பணம் கொடுத்தேன். நான் எதிரிக்கு 4 லட்சம் பணமாக கடன் கொடுத்தேன். மேற்படி பணம் எந்த வகையில் எனக்கு வந்தது அல்லது வங்கியில் இருந்து எடுத்ததற்கு ஆதாராமாக நீதிமன்றத்தில் ரசீது ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

7. நான் வேலை செய்து வந்த ஸ்ரீ வித்யா லட்சுமி பைனான்ஸ் தற்போது இயங்கவில்லை. நான் மேற்படி பைனான்ஸ் நிறுவனத்தில் ரூ.4500 மாத

சம்பளத்திற்கு வேலை செய்து வந்தேன். நான் எத்தனை வருடமாக ஸ்ரீ வித்யா லட்சுமி பைனான்ஸில் வேலை செய்து வந்தேன் என்றால் 2008ல் இருந்து 2015 வருடம் வரை வேலை செய்து வந்தேன்.

8. எதிரிதான் கடனுறுதி சீட்டை எழுதி கொடுத்தாரா என்றால், எதிரிதான் எழுதி கொடுத்தார். எதிரி என்னிடம் எந்த பணமும் வாங்கவில்லை என்றாலும், எதிரி ஸ்ரீ வித்யா லட்சுமி பைனான்ஸ் நிறுவனத்திற்கு அளித்த காசோலையை நான் எடுத்துவந்து எதிரி மீது வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

9. எதிரி ஸ்ரீ வித்யா லட்சுமி பைனான்ஸ் நிறுவனத்தின் பங்குதாரர் ஆறுமுகம் என்பவருக்கு கொடுத்த காசோலையை நான் எடுத்து வந்து வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. காசோலை எனக்கு கொடுத்ததுதான். எதிரிக்கு 4 லட்சம் கடனாக கொடுக்கும் அளவிற்கு எனக்கு வருமானம் இல்லை என்றாலும், எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

10. என்மீது நான் ஸ்ரீ வித்யா லட்சுமி பைனான்ஸ் நிறுவனத்தில் காசோலை மற்றும் இதர ஆவணங்களை திருடியதாக காவல் நிலையத்தில் புகார் தாக்கல் செய்யப்பட்டு இருந்தது என்றால் சரியல்ல. எனக்கு வருமானம் இல்லாத காரணத்தால் எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/–R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.